1996 ஆகஸ்ட் 10]

156--

கூட்டுறவு அங்காடிக் கட்டிடத்தை சீர்செய்தல்

545*--திரு வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, குருவிக்கரம்பை கிராமத்திலுள்ள கூட்டுறவு அங்காடி கட்டிடத்தை சீர் செய்துதர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குருவிக்கரம்பை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியால் நடத்தப்படும் மூன்று முழுநேர நியாய விலைக் கடைகளும் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகின்றன. வாடகைக் கட்டிடத்தை சரி செய்கிற பொறுப்பு அரசுக்கு இல்லை. சரியாக இல்லாவிட்டால் முறைப்படி அந்தக் கட்டிடத்தை சரியாக வைத்துக் கொள்ளலாம் என்று அறிவுறுத்தப்படும். எனவே இக்கேள்வி எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அ. அசோகன்.

திரு. அ. அசோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு அங்காடிகள் பெரும்பாலும் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகின்றன. அவற்றிற்குச் சொந்தக் கட்டிடம் கட்டிக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கத்தின் சார்பாகவுள்ள நியாய விலைக் கடைகள் கூட்டுறவுத் துறையின் சார்பாக ஏறக்குறைய 22 ஆயிரம் இடங்களில் நடந்து வருகின்றன. 22 ஆயிரம் நியாய விலைக் கடைகளுக்கும் கட்டிடம் கட்டுவது என்பது சாத்தியமல்ல. கூட்டுறவுச் சங்கங்களுக்கு கட்டிடத்தைப் படிப்படியாகக் கட்டி வருகிறோம். இந்த ஆண்டுகூட, புதியதாகக் கட்டுவதற்கு அரசு பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.